நாள்.07.06.2024

**அசல் வழக்கு எண். 54/2021**

**இ.ம.எண்.1/2023 மனு உத்தரவின் பேரில் வா.சா.1 மீண்டும் அழைத்து 6,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

6,7 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் 6 ம் பிரதிவாதி எனக்கு அக்கா, 7 ம் பிரதிவாதி எனது தங்கை ஆவார். தாவா சொத்தை யார் கிரையம் வாங்கினார் என்றால் என் தந்தை. எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் நான் பிறப்பதற்கு முன்பே கிரையம் வாங்கிவிட்டார். எவ்வளவு விஸ்திரணம் கிரையம் வாங்கினார் என்றால் 50 செண்டு. என் தந்தை இறந்தபிறகு தாவா சொத்தை யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். 18.05.2012 ல் ரூ.20 ஸ்டாம்ப் பேப்பரில் எழுதப்பட்ட பாக பிரிவினையின் போது 6,7 பிரதிவாதிகளுக்கு பாகம் ஏதும் கொடுக்காமல் செய்முறைக்காக தாவா சொத்தை 6,7 பிரதிவாதிகளுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டது. இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதியும், 2 ம் பிரதிவாதியும் தாவா சொத்தை அனுபவம் செய்திருக்கிறார்களா என்றும், அவர்களுக்கு உரிமை உள்ளதா என்றால் இல்லை. 1,2 பிரதிவாதிகள் எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் தாவா சொத்திலிருந்து 1 கிலோ மீட்டருக்கு அப்பால் வசித்து வருகிறார்கள். தாவா சொத்திற்குண்டான வீட்டு வரி ரசீதுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2006-க்கு பிறகு உள்ள வீட்டு வரி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 2006-ம் ஆண்டிற்கு முன்னாள் உள்ள வீட்டு வரி ரசீதுகள் எல்லாம் கஜா புயலின் போது காணாமல் போய்விட்டது. தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் என்னுடைய அனுபவத்தில்தான் உள்ளது.

**10 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.